# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 42/2 — 1973 ජනවාරි 14 වැනි ඉරිදා — 1973.01.14

42/2 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 14 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

#### சுங்க அறிவித்தல் இல. 67/3/269

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,775/17 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பறாவுக்கான மதிப்பீட்டு கொ. கா. கே. விலை 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1005.64 ஆகுமென் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

**2.** கொப்பறு, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பறுவுக்கு மான ஏற்றுமதித் தீர்வை | | ஒவ்வொரு தொன் தேங்காயெண் ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவ லுக்குமான ஏற்று மதித் தீர்வை | | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|---|---|---|
| ரூ. ச. | | ரூ. ச. | | ரூ. ச. | | ரூ. ச. |
| 255 66 | .. | 228 57 | .. | 194 11 | .. | 63 91 |

**3.** சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

ஜே. எப். சேவியர்.
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. 744/22.
மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 14 ந் உ.

---

#### சுங்க அறிவித்தல் இல. 61/9/580

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்.

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்பட வேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இருத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி .. .. .. .. .. | 1 40 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இருத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை .. | 0 26 |

ஜே. எப். சேவியர்.
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. ஏ. 781,
மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 14 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.